மதிய உணவு வகைகள்
இறைச்சி, மீன், மரக்கறி
சோறு - பிரியாணி
மாலையில் றொட்டி,
கொத்துறொட்டி
உங்கள் பசியைப் பூர்த்தி
செய்கிறோம்.
தேனமுதம்
452 கேணல் கிட்டுசாலை,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுவைப் பிரியர்களே!
சுவைமிக்க காலை உணவு
அப்பம், பிட்டு, இடியப்பம்
சுவைத்து மகிழ்ந்திட
நாடுங்கள்:
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை.
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-540)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 28 சனிக்கிழமை (11 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 76

# 4 ஆம் கட்டப் பேச்சு தாமதமடையலாம்

## கண்காணிப்புக்குழு செயற்பாட்டில் அரசாங்கம் கூடுதல் அக்கறை

கொழும்பு, பெப்ரவரி 11

மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக்குழுக்கள் முழுமையாக செயற்பட ஆரம்பித்த பின்பே விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான அடுத்தகட்டப் பேச்சுக்கள் நடைபெறும் வாய்ப்புகள் இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக்குழுக்களை இயங்க வைப்பதிலேயே அரசு முன்னுரிமை அளித்துள்ளதாகவும் –

அதைத் தொடர்ந்தே அடுத்தகட்டப் பேச்சுக்களை நடத்த அரச உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களான வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வந்திருந்த அரச தரப்பு பிரதிநிதியான இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸிடம் மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்து மேலும் விவாதிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரி இருந்தனர்.

அதன்பின்பே கண்காணிப்புக் குழுக்கள் முழுமையாக செயற்பட முடியும் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

எனினும் முதலில் கண்காணிப்புக் குழுக்களை இயங்க வைக்கவும் —

பின்னர் பேச்சை ஆரம்பிக்கவும் — அரச உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இ.தொ.கா.வின் 6 அம்ச கோரிக்கை குறித்து

## தொண்டா தலைமையில் தூதுக்குழு ஜனாதிபதியை சந்தித்து பேச்சு

கொழும்பு, பெப். 11

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு கடந்த செவ்வாயன்று முதல் முறையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தியது.

இ. தொ. கா. தலைவரும், கால்நடை அபிவிருத்தி கிராமிய தொழில்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் அந்தக் குழுவுக்கு தலைமை வகித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட இ. தொ. காவின் ஆறு அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியே இப்பேச்சு நடத்தப்பட்டது.

ஜனாதிபதியுடனான அந்தப் பேச்சுக்களின் போது மலையக மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பாக பரிகாரம் காணப்பட்டதாக அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார். [ஐ]

## பகிஷ்கரிப்பு போராட்டம்: மாணவர்கள் கைவிட்டனர்

### திங்கள் முதல் விரிவுரைகளுக்கு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள், கடந்த நான்கு நாட்களாக நடத்தி வந்த விரிவுரைகள் பகிஷ்கரிப்பு போராட்டத்தை நேற்றுடன் கைவிட்டனர்.

இவர்கள் திங்கட்கிழமையில் இருந்து விரிவுரைகளுக்கு சமுகமளிப்பர் என கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்தது

கலைப்பீட மாணவர் ஒன்றியம் நேற்று மாலை பதில் துணைவேந்தரை சந்தித்து பேசியதை அடுத்து இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட மாணவன் மீதான தடையை பதில் துணைவேந்தர் பேராசிரியார் க. வை. பரமேஸ்வரன் நேற்று நீக்கினார்.

இதேவேளை வண்டி எரிப்புச் சம்பவம் தொடர்பாக, இதில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் உள்ளடக்கிய முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்த கோரிக்கையும் பதில் துணைவேந்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக ஒன்றியம் தரப்பில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. [இ-4]

## பொருள்கள் எடுத்துவர புதிய கப்பல்கள் சேவை

யாழ்ப்பாணம், பெப். 11

கொழும்பில் இருந்து யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வரும் பணியில் புதிய கப்பல்கள் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.

இதுவரை காலமும் பொருள்கள் எடுத்து வரும் பணியில் ''மேர்கன்டைல் சிப்பிங் லைன்'' என்னும் கப்பல் நிறுவனத்தின் கப்பல்களே ஈடுபட்டிருந்தன.

இனி ''சிலோன் சிப்பிங் கோர்பரேசன்'' கப்பல் நிறுவனத்தின் கப்பல்களே பொருள்களை எடுத்து வரும்.

தனது கப்பல்களை சேவையில் ஈடுபடுத்த புனர்வாழ்வு அமைச்சுடன் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த நிறுவனத்தின் கப்பல் ஒன்று தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் குடாநாட்டுக்கான நிவாரணப் பொருள்களை ஏற்றி வருவதாகவும் —

அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்களுடன் அக்கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — தற்சமயம் பொருள்கள் ஏற்றி வரும் பணியில் ஈடுபட்டுள்ள 'கோமாரி', 'மாஹோா', 'குமண', 'ஹபரண' ஆகிய கப்பல்களை புனர்வாழ்வு அமைச்சு நிறுத்தி விட்டதாகவும் —

தேவைப்பட்டால் யாழ். அரச அதிபர் இந்தக் கப்பல்களை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஹமில்டனின் இடத்துக்கு பாலபட்டபெண்டி நியமனம்

## தற்காலிகமாகப் பணியாற்றுவார்

முச்சந்தி முரளி



அட்ப! ஏதாவது ஒரு தடையைப் போட்டுத்தான் தடை நீக்கம் செய்வினம் போல...!

கொழும்பு, பெப்ரவரி 11

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாலபட்டபெண்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அப்பதவியை ராஜினாமாச் செய்துள்ளதை அடுத்து—

அப்பதவிக்கு பொருத்தமான சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படும்வரை திரு. பாலபட்டபெண்டியே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது செயலாளரான திரு. பாலபட்ட பெண்டியை அப்பதவிக்கு நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளரான திரு. பாலபட்டபெண்டி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களில் அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்து வருவது தெரிந்ததே.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிவில் அதிகாரி ஒருவரை நியமிப்பது என அரசு ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

அதற்கு வசதியாகவே ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உரிய காலத்துக்கு முன்னரே அப்பதவியில் இருந்து ராஜினாமாச் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது

ஹமில்டனின் ராஜினாமாவைத் தொடர்ந்து செயலாளர் பதவிக்கு மூத்த சிவில் அதிகாரியான தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வாவே நியமிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீதான பிடியை ஜனாதிபதி இறுக்குகிறார்

### பி.பி.ஸி வியர்சனம்

லண்டன், பெப். 11

பாதுகாப்பு செயலாளர் பதவி மாற்றத்தின் மூலம் படைகள் மேல் ஜனாதிபதியின் பிடியும் இறுகுகிறது

இவ்வாறு பி. பி. ஸி. நேற்று கருதது வெளியிட்டது.

புதிதாக நியமனம் பெற்றுள்ள பாலபட்ட பெண்டி விடுதலைப் புலிகளுடன் நடக்கும் பேச்சுக்கு தலைமை வகித்து வருகிறார்.

புதியபதவி நியமனம் மூலம் அவருடைய நாணயமான பேச்சுவார்த்தை முயற்சிக்கு மேலும் பலம் கிடைக்கிறது

பாதுகாப்பு படைகள் வேண்டுமென்றே போரை நீடிக்க முயல்கின்றன என்று சந்திரிகா முன்னர் குறை கூறியிருந்தார்—

இப்படி பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

## அரசின் போக்கில் ஹமில்டன் அதிருப்தி

சிவில் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தாம் ஆதரிக்கவில்லை என்று ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சிவில் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்பவே தாம் பதவி விலகியதாகவும் அவர் தெரிவித்தார்

தமது சொத்துக்களை குறிப்பாக விவசாயத்தை கவனித்துக் கொண்டிருக்கப் போவதாகவும் அவர் கூறினார். [இ]

# இனப்போரின் சூத்திரதாரி ஜே.ஆர்: சந்திரிகா பகிரங்கமாக குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 11

சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைப் பலியெடுத்த இனவாத யுத்தத்தின் மூலகர்த்தா ஜே. ஆர். ஜெயவர்த்தனவே ஆவார்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா பகிரங்கமாககுற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கம் அளித்த விருந்துபசாரத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பத்து ஆண்டுகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர்.-ஹேமாவுக்கானவசதிகளை குறைப்பதற்கு சந்திரிகா முடிவு

### அரச வாகன பாவனையில் துஷ்பிரயோகம்

கொழும்பு, பெப். 11

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் விரைவில் குறைக்கப்பட இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான ஹேமா பிரேமதாஸாவும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் ஜனாதிபதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வாசஸ்தலம் ஒன்றும் ஆடம்பர வாகனம் ஒன்றும் வழங்கப்படும்.

அத்துடன் அமைச்சர் ஒருவருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு வசதிகளும், காரியாலய வசதியும் அவர்களுக்கு வழங்கப்படும்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும், 5 பொலீஸாரும் அடங்கிய குழு பாதுகாப்புக்கு பொறுப்பாக இருக்கும்.

இவற்றுக்கு மேலாக முன்னாள் ஜனாதிபதிகள் அனுபவிக்கும் மேலதிக வசதிகளை அரசு விரைவில் நிறுத்திவிடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று வெளிநாட்டுச் செய்தியாளர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் முன்பாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 11

''சண்டே லீடர்'' வார இதழின் ஆசிரியர் வசந்த விக்கிரமசிங்கா தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்—

சுதந்திர தொடர்பு சாதனங்களின் வளர்ச்சிக்குத் தடையான சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் —

ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக நடைபெற்றது.

சுதந்திர தொடர்பு சாதன இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்த அந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (இ-ஐ-3-4)

## 300 தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்

யாழ்ப்பாணம், பெப். 11

அண்மையில் பருத்தித்துறைக்கு வந்த 'குமண' கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்படாததை அடுத்து கொழும்பில் 300க்கும் மேற்பட்ட வடபகுதி தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குமணவில் தபால் பொதிகள் எடுத்து வரப்படாதது குறித்து வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கொழும்புக்கு தகவல் அனுப்பி உள்ளார். (இ 4)

## பற்றறி அனுமதிப்பதில் படையினர் கெடுபிடி

### வாகனப் பத்திரம வேண்டுமாம்

யாழ்ப்பாணம், பெப். 11

வடபகுதிக்கு கொண்டு செல்ல வாகனங்களுக்கான பற்றறிகள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ள போதிலும் தாண்டிக்குளத்தில் உள்ள படையினர் தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

இதன்படி வாகன அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் அதற்கான ஒரு பற்றறியை மட்டுமே எடுத்துச் செல்ல முடியும்.

அதுவும் அவற்றைப் புதிய நிலையில் எடுத்துச் செல்ல முடியாது என்றும் —

அசிட் நிரப்பியே எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் — படையினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களாக வடபகுதியில் வாகன அனுமதிப் பத்திரம் எதனையும் வழங்க ... நடவடிக்கை எடுக்கவில்லை ... (இ-7)

## இலவச பாட நூல்கள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் அடுத்த வாரம் இங்கு எடுத்து வரப்படவுள்ளன.

'மாஹோா' கப்பலில் அவற்றை இங்கு எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புத்தகங்கள் இங்கு வந்து சேர்ந்ததும் கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக அவற்றைவிநியோகிக்க இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-7)

### பாதுகாப்புக்கு கூடுதல் நிதி

## தீர்வுமுயற்சியை பாதிக்காது அமைச்சர் பீரிஸ் கருத்து

கொழும்பு, பெப்.11

பாதுகாப்புக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படமாட்டாது.

பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

டட்சன் சனி (Dutson Sunny) B211 11ஸ்ரீ 9000 தொடர் இலக்கம் வொக்ஸ் வகன் 9ஸ்ரீ இலக்கமுடைய இரண்டு, பெற்றோலில் ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நீ. ஆனந்தசிவம், புதுத்தோட்டம், நெல்லியடி, கரவெட்டி அல்லது சுப்பர் மார்க்கட், பஸ்நிலையம் நெல்லியடி [35133]

ஒரு வயது நிரம்பிய ெபாமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: க. ஐயாத்துரை, பிரசாத் வீதி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை. (35126)

சுந்தோர் மேசை, டைனிங் ரேபிள், ஸ்பிறிங் கட்டில், றெஸிங் ரேபிள், டபிள் டோர் பிறிஜ், குசன் கதிரைகள், வோசிங் மெசின், அலுமாரி என்பன விற்பனைக்கு உண்டு. சி நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (35143)

Broiler இறைச்சக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள், இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [35141]

பிறமா கோழிகளும், பன்டம் கோழிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சந்திரன் (குட்டி), இல. 86/3, ஸ்ரேசன் முன்பாக, புங்கன்குளம், அரியாலை. [35146]

மயில் குஞ்சு, Gold Fish விற்பனைக்கு உண்டு. இல. 7, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35145]

### தேவை

நகை வியாபாரம், கணக்கு நன்கு அனுபவமுள்ள 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: கிருபா நகை பூங்கா, 333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி 372]

தங்கியிருந்து கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. குடும்பத்தோடு தங்கியிருக்க வசதியுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35142]

பெண் காசாளரும், விற்பனையாளரும் உடன் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். பாலாஜி களஞ்சியம், இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகில்] [35130]

### நுளம்புத் தொல்லையா?

தூக்கம் கெட்டதா, நீம் சுகாதார தூபம் புகைத்து நிம்மதியாக நித்திரை கொள்ளுங்கள். பக்கற் ஒன்றின் விலை ரு 2/50, 25 பக்கற் கொண்ட அட்டை ஒன்று ரூ. 50/- ஆகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனைக்குண்டு. 'மில்க்வைற்'. (சி-373)

### விற்பனையாகின்றன

1995ஆம் ஆண்டுக்கான திறமான வண்ண வண்ண படங்களுடன் கூடிய கலண்டர் படங்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். (தொகையாகப் பெறுபவர்களுக்கு அச்சக பதிவுக் கூலி இலவசம்) ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். [சி-531]

### மணமகன் தேவை

யாழ். இந்து பெற்றோர் அவுஸ்திரேலியாவில் பதிவிடம் பெற்ற 27 வயது நிரம்பிய செவ்வாய் தோஷமுள்ள Dip-in-Accountancy முடித்த மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 756, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (35054)

### மணப்பெண் தேவை

கிறிஸ்தவ, 35 வயது, கொழும்பில் மிருக வைத்தியராக (Veterinary Surgeon) கடமையாற்றும் குடிப் பழக்கமற்ற மணமகனுக்கு நன்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. வெளிநாட்டவர்களும் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு: இல. 757, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35084]

### கணிதம்

ஆண்டு 6 முதல் O/L வரை தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படுகின்றது. கற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் மார்க்கோ, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [35119]

### வகுப்புகள்

கேக் ஐசிங், பூ வேலை, தையல் வகுப்புகள் ஆரம்பம்: 11-2-95 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி. கட்டணம் ரூபா 50/-. சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும் மார்க்கோ, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (35118)

### காவேரி சீயாக்காய் பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனம், 80% சீயாக்காயும், 20% இயற்கைப் பொருள்களும், சேர்த்து தயாரிப்பது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல், காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் கிடைக்கும். [34909]

### REPAIR'S!

Repairs! are your Radio's T.V's, Deck's Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee Dilka Watch and Radio works. 284. Stanley Road (Ariyakulam Junction) Close to Vanavil Jaffna, Branch Kandy road Chavakachcheri. [சி-364]



## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

**A/L கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்**

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகின்றன.

பெளதீகம் — ஜெயசிலன்
இரசாயனம் — ம. இராமநாதன்

(சி-349)


## 17 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 12 — 09 — 1921
விண்ணில்: 17 — 01 — 1978

அமரர்
**ஆ. க. ஆறுமுகம்தம்பி**
[புகையிரத நிலைய அத்தியட்சகர் C. G. R., மருதானை]

திதி: 11 — 02 — 1995

அன்புடன் நினைவு கூரும்;
மனைவி கமலா, பெறாமக்கள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்
மருமக்கள்.

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[35073]


## திருமறைக் கலா மன்றம்

வழங்கும்

நாளை
12-02-95 (ஞாயிறு)
மாலை 6-45 மணி
மன்ற அரங்கில்
பிரவேசம்: இலவசம்

# கலை நிலா அரங்கு

சிறப்பு நிகழ்ச்சி

இரு தசாப்த இடைவெளியின் பின்,
கூத்துலகில் கொடிகட்டிப் பறந்த

★ **தேவசகாயம்பிள்ளை** ★

(நாட்டுக் கூத்து)

குறிப்பு: ஆசனம் விரும்புவோர் அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[சி-375]



## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி -- 1995

இன்று சனிக்கிழமை [11-2-95] பி.ப. 1 மணிக்கு நடைபெற இருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

- அதிபர் -

[சி/5777]



## இலங்கை
## இளங்கலைஞர் மன்றத்தின்
# 15 ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

**11-2-95 முதல் 25-2-95 வரை**
(தொடர்ந்து 15 தினங்கள்)

கலா ரஸிகர்கள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

**1ஆம் நாள் 11 – 02 – 1995 சனிக்கிழமை**

"லிங்கம் கூல்பார்"
ஸ்தாபனத்தின் ஆதரவில்

மாலை

**4-00 — 5-00 மங்கல இசை**
கே. ஆர் சுந்தரமூர்த்தி, எஸ். தேவதாஸ் )— நாதஸ்வரம்
எஸ். ராமதாஸ், எஸ். சொர்ணலிங்கம் )— தவில்

**5-00 — 5-20 பாட்டு**
ச. மாதுமையாள் | ச. யாழினி
ப. கிருஷ்ணகோபி | த. தங்கராணி
ப. சுதர்சினி | அ. கவிதா
ச. ஜெயந்தினி | த. சாமினி
ச. ஜெயதாரிணி | க. இறைவி
ச. கவிதா | இ. ப்ரதீபா
ப. உஷா — வயலின்
கே. கஜன் — மிருதங்கம்

**5-20 — 5-40 வயலின் இசை**
ச. கல்பனா, | சு. கனிசியா
பொ. அனுராதா, | ஜெ. ரனித்தா
அ. செல்வரத்தினம் — மிருதங்கம்

**5-40 — 6-00 பாட்டு**
ராமகிருஷ்ணாலய மாணவிகள்
இ. காயத்திரி | சோ. சந்திரிகா
கா. திருமகள் | ச. கேதீஸ்வரி
ப. அனுஷா | இ. மைத்திரி
ந. சர்வாங்கினி
ப. உஷா — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

**6-00 — 6-45 பண்ணிசை**
ஆர். திருஞானசம்பந்தன் — பாட்டு
எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**6-45 — 7-30 பாட்டு**
யசோதா ஸ்ரீகுமரன் — பாட்டு
பாக்கியலக்ஷ்மி நடராசா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**7-30 — 8-00 மங்கல விளக்கேற்றல்**
திரு. நா. அப்புலிங்கம் அவர்கள் (லிங்கம் கூல்பார்)
திரு. ப. வரதராஜசிங்கம் அவர்கள் (ஈஸ்வர பகவான்)
டாக்டர் எஸ். தியாகராசா அவர்கள் (மெடி எயிட்)
திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்கள் (சித்தன்கேணி)

★ அருளுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் அவர்கள் (பிரதமகுரு சிவன்கோயில், வல்வெட்டித்துறை)
அருட்திரு பேனாட் அடிகள் அவர்கள் (அதிபர், சம்பத்திரிசியார் கல்லூரி)

★ பிரதம அதிதி
துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

★ தலைவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. என். கே. பத்மநாதன் அவர்கள் (நாதஸ்வர வித்துவான்)
வைத்திய கலாநிதி. க. சிவநேசன் அவர்கள்
திரு. சி. பேரின்பநாதன் அவர்கள் (தர்மகர்த்தா, கொன்றலடி வைரவர் தேவஸ்தானம்)

**8-00 — 9-00 பாட்டு**
சு. கணபதிப்பிள்ளை — பாட்டு
உ. ராதாகிருஷ்ணன் — வயலின்
வ. சாந்தன் (போராளி) — மிருதங்கம்
எம். சிதம்பரநாதன் — கெஞ்சிரா
க. கண்ணதாசன் — கடம்

**9-00 — 10-15 நாடகம்**
G. சாந்தன் S. செல்வம்
இணைந்து வழங்கும்
**சத்யவான் சாவித்திரி**

வாழ்த்துவோர்:
**அன்பு அழகுச் சோலை (சோமன்ஸ்)**
43, சந்நிதானம் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-541]


# ஆனையிறவு உப்பு தென்னிலங்கைக்கு

கொழும்பு, பெப். 11

ஆனையிறவு உப்பளத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள 40 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை கொழும்புக்கு கொண்டு செல்லுவதற்கான ஏற்பாட்டை இலங்கை உப்புக் கம்பனி மேற்கொண்டு வருகிறது.

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி வேலைகள் 1990 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன என்று கம்பனியின் தலைவர் டி. எஸ். அசோக் குமார தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஆனையிறவு உப்பளத்தை நேரில் சென்று பார்வையிட்டுத் திரும்பிய அசோக் குமார நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர் மகாநாட்டில் பேசிய போது இப்பொழுது உப்பளத்தில் உள்ள உப்பு 4 கோடி ரூபா பெறுமதியானது என்று கூறினார்.

ஊழியர்களின் சம்பளத்துக்கென உப்புக் கம்பனி மாதாந்தம் 8 லட்சம் ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ள போதிலும் இந்த உப்பளங்களில் உற்பத்தி எதுவும் மேற்கொள்ளப்படாதிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அங்குள்ள அலுவலகக் கட்டடங்களை ஆனையிறவு முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே பயன்படுத்தி வருகிறார்கள்.

தற்போது கொழும்புக்கு எடுத்துவரப்படவிருக்கும் உப்பு கொழும்பிலுள்ள ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் விற்பனைக்கு விடப்படும் என்றும் தலைவர் கூறினார்.

(இ-4)

## நாளை

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும், பயிலரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும்.

ஆய்வரங்கில், "மரபுவழிச் சோதிடம்" என்ற பொருளில் திரு த. சண்முகம்; "சோதிடத்தில் சில அணுகுமுறைகள்" என்ற பொருளில் திரு. எம். செல்லச்சாமியும் ஆய்வுரை வழங்குவர். பயிலரங்கை திரு கே. சாம்பசிவமும். திரு பி. இரத்தினசேகரும் நடத்துவர். [ஒ]

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் சிநேகித பூர்வமான போட்டிகளில்—

இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியை யாழ். பல்கலைக்கழக அணி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் எதிர்த்து விளையாடும். [ஒ-4-20]

## இன்று

கடந்த மாதம் 2 ஆம்திகதியில் இருந்து நியமனம் பெற்ற, கல்வி வலயம் IIஇன் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-5-152)

★ ★ ★

கரவெட்டிக் கோட்ட பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி இன்று சனிக்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஒ-5-125]

## திருத்தம்

02-02-1995 உதயனில் வெளியான இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக் கிளையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழில் —

வெளியான கட்டுரையின் தலையங்கம் "யாழ்ப்பாண மேற்தரக் கிளையின் வங்கியியல்துறை வரலாறு" என்று பிரசுரமாகியிருந்தது.

"இலங்கை வங்கியியல் துறையில் இலங்கை வங்கியின் வரலாறும் அதன் யாழ். மேற்தரக் கிளையும்"— என்பதே சரியான தலைப்பு ஆகும்.

## தசாக, கிருஹயக்ஞ அழைப்பு

பிரம்மஸ்ரீ
**ஐயாத்துரைக்குருக்கள் சோமசுந்தரஐயர்**

தசாகம்: தை மாதம் 29ஆம் திகதி (12-02-1995) ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணி
ஏகோதிஷ்டம், மாசிகம்: மாசி மாதம் 1ஆம் திகதி (13-03-1995) திங்கட்கிழமை
சபிண்டீகரணம்: மாசி மாதம் 2ஆம் திகதி (14-02-1995) செவ்வாய்க்கிழமை
கிருஹயக்ஞம்: மாசி மாதம் 3ஆம் திகதி (15-02-1995 புதன்கிழமை (மதியபோசனம்)


அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்றிப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவியும், குடும்பத்தினரும்.

கிராமசபையடி,
நீர்வேலி.
[35124]

## 1-ம் வருட நினைவஞ்சலி

திருமதி
**கார்த்திகேசு (சின்னத்துரை)**
நல்லதங்கம்
[புங்குடுதீவு - 2]



தோற்றம்: 04 — 07 — 1912
மறைவு: 23 — 01 — 1994

திதி - 11 - 02 - 1995

அன்பால் அறிவால் பண்பால் பாசத்தால் எங்களை எல்லாம் வழி நடத்திவிட்டு தங்களின் விதி சதியாகியது ஏனோ? சென்றீர்கள் அம்மாவே ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எங்கள் மனம் பாரிலுள்ளவரை பாசத்தை மறவோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல 2, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[35153]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தந்திரமான காய் நகர்த்தலா?

கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இன்றைய அரசியல் நிலைமையை ஓரளவு விவரித்துள்ளார். மிகக் குறிப்பாக, வடக்கு - கிழக்கு விவகாரம் — இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சி — அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சின் முன்னேற்றம் — குறித்துப் பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் நான்காவது கட்டம் நடைபெறுவதில் உள்ள தாமதத்தினால் எழுந்துள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி வெளியிட்ட தகவல்கள் அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் அன்றாடக் கஷ்டங்களைத் தீர்த்துக் கொண்டு அடிப்படைப் பிரச்சினையான அரசியல் விவகாரத்தைப் பேசுவது என்ற இணக்கத்திலிருந்து மாறிச் செல்ல முனைந்த அரசு, இப்போது மாறியும் மாறாத ஒரு இடைநடு அணுகுமுறையை கைக்கொள்ள எத்தனிப்பதாகத் தெரிகிறது!

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக்கு ஒரு பாதையை திறந்துவிட்டு, பொருளாதாரத் தடையை மேலும் நீக்குவது [பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்களின் தடையை நீக்குவது) என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றாமல்—

அதற்குப் பதிலாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கும் உத்தியை அரசாங்கம் கையாளப்போகிறது!

குடாநாட்டின் உட்கட்டுமானம் சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் இன்னும் இரண்டு வாரங்களில் புனரமைப்பு வேலைகள் தொடங்கும் என்ற சந்திரிகாவின் அறிவிப்பை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் முதன்மைப் படுத்தி உள்ளனர். அதற்குச் சர்வதேச ரீதியான பிரசாரம் கிடைத்திருக்கிறது. தமிழர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் அரசாங்கம் அக்கறையாக உள்ளது என்ற ஒரு தோற்றம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது!

ஆனால் குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கும் தரைவழிப் போக்குவரத்துப் பாதை இல்லாமல், அது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரியதாகும். புனரமைப்புக்குத் தேவையான உபகரணங்களையும், இயந்திராதிகளையும் கடல் வழியே கப்பல் மூலம் கொண்டு வந்து சேர்ப்பது என்பது சாத்தியமற்றதாகும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கப்பலில் கொண்டு வந்து சேர்ப்பதற்கே ''தரிகிடதோம்'' போடப்படுகிறது. இந்த இலட்சணத்தில் பல துறைகளையும் புனரமைக்கவும், புனர் நிர்மாணம் செய்யவும் தேவையான பெருந்தொகைப் பொருள்களை கனரக இயந்திர உபகரணங்களை கப்பல் மூலம் கொண்டு வருவது என்பது செக்கிழுத்துமாயும் திட்டமாகவே அமையும்!

இன்னும் ஒரு கோணத்தில் நோக்கின், பூநகரி முகாமை அகற்றாமல் புனரமைப்புப் பணிகளைத் தொடங்குவது, அரசின் நிலைப்பாட்டை புலிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான ஒரு மறைமுகமான நிர்ப்பந்தம் என்று கூடக் கருதலாம்.

பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் சந்திரிகா தந்திரமான காய் நகர்த்தலில் ஈடுபடுகிறார் என்றும் இது எண்ண வைக்கிறது! சமாதானப் பேச்சு; சமரசத் தீர்வு என்று வந்துவிட்டு வெட்டி ஓட்டும் தந்திரங்களை கையாள்வதால் பெரிதாக எதனையும் எய்திவிடலாகாது.

மக்களின் தேவைகளையும், அபிலாசைகளையும் நன்கு உணர்ந்து, யதார்த்தமான, நடைமுறைச் சாத்தியமான நேர்வழிகளைக் கையாள்வதன் மூலமே நற்பயனை எதிர்பார்க்கலாம்.

சர்வதேசப் பிரசாரம் தேடுவதாலோ, அந்த வழி மூலமான செல்வாக்குகளாலோ இலக்கை எய்த நினைப்பது அசாத்தியமான பெறுபேறுகளையே தரக்கூடும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி

# "சமாதான ரயில்" வவுனியா வருகிறது

### 5 ஆயிரம் மக்கள் பேரணி

வவுனியா, பெப். 11

நாட்டின் பல இடங்களில் நடைபெற்று வரும் சமாதானப் பேரணி வவுனியாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும்.

சகல இனங்களையும் சேர்ந்த சுமார் ஐயாயிரம் மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் சிங்கள மக்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

16 ஆம் திகதி காலை ''சமாதான ரயில்'' கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வரும். [ஓ-க]

# மே மாதம் வரை மட்டுமே மாணவர் மதிய உணவு

கொழும்பு, பெப். 11

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு இவ்வாண்டு மேமாதம் வரை மட்டுமே வழங்கப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் வறிய குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா அலவன்சாக வழங்கப்பட உள்ளது. 500 ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படும். (இ-க-6)

வேலை வாய்ப்புத் தேடி

# வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை குறைந்தது

கொழும்பு, பெப். 11

இலங்கையில் இருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு செல்வோர் தொடர்பாக அரசு புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளமையும், சில நாடுகளின் விசாக் கட்டணங்களை அந்நாடுகள் அதிகரித்துள்ளமையுமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு ஒருவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் 45 ஆயிரத்துக்கும் அதிகமாக செலவிட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-14)

இளங்கலைஞர் மன்றத்தின்

# 15 ஆவது இசைவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 11

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் பதினைந்தாவது இசைவிழா இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வரைதொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும். தினமும் மாலை 4 மணிக்கு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகும் இன்றைய முதல் நாள் விழாவில் பிரதம அதிதியாக துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொள்வார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வல்வெட்டித்துறை சிவன்கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், புனித சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. பேணாட் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக நாதஸ்வர வித்துவான் திரு. என். கே. பத்மநாதன் வைத்திய கலாநிதி க. சிவநேசன், கொன்றலடி வைரவர் தேவஸ்தான தர்ம கர்த்தா திரு. சி. பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

லிங்கம் கூல்பார் உரிமையாளர் திரு. நா. அப்புலிங்கம், திரு. ப. வரதராஜசிங்கம், வைத்திய கலாநிதி. எஸ். தியாகராசா, திரு. வ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைப்பார்கள்.

லிங்கம் கூல்பார் ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெறும் இன்றைய விழாவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசை இளங்கலைஞர் மன்றத்தினதும் ராமகிருஷ்ணலாய மாணவிகளது பாட்டு,வயலின் இசை பண்ணிசை, உட்பட மாலை யசோதா ஸ்ரீ குமரன் மற்றும்திரு. சு. கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாட்டு போன்றவை நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக ஈஸ்வரி நாடக மன்றத்தினர் வழங்கும் பக்த நந்தனார் நாடகம் இடம்பெறும். (ஓ-111)

கொழும்பில் தொழிலாளர்கள்

# கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 11

அரசுத் துறையைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக ''ரெலிகொம்'' கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய தந்திப் பரிவர்த்தனை நிலையத்துக்கு முன்னால் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு ''ரெலிகொம்'' ஊழியர்கள் நூற்றுக் கணக்கில் இந்த அடையாள ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் காணப்பட்டனர். (ஒ-க-6)

மோசடியில் ஈடுபட்ட

# ஈரான் நாட்டு எம்.பிக்கு சிறையும், கசையடியும்!

தெஹ்ரான், பெப். 11

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் ஈரான் நாடாளு மன்றத்தின் உறுப்பினர் ஒருவருக்கு ஓராண்டுகால சிறையும் 30 கசையடிகளும் வழங்கப்பட்டன.

தலைநகர் தெஹ்ரானுக்கு மேற்கே 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொய்ன்சாஹ்ரா பிரதேசத்தைச் சேர்ந்த மஜித் நடேரி என்ற இந்த உறுப்பினர் ஒரு மதகுரு ஆவார். ஆகவே விசேட மத நீதிமன்றம் அவரை விசாரித்துத் தண்டனை வழங்கியது.

தனிப்பட்ட லாபத்துக்காக தன்னுடைய பதவியைப் பாவித்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

அவருக்கு 4 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

அவரும் நான்கு சகபாடிகளும் 45 ஆயிரம் டொலர் மோசடி ஒன்றில் ஈடுபட்டிருந்தார்கள். மற்ற நால்வருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. [ஓ-க]

# சமாதான முயற்சியில் அரசு இரட்டை நாக்குடன் பேச்சு

## நோர்வே ஏஜென்ஸிக்கு கரிகாலன் பேட்டி

ஒஸ்லோ, பெப். 11

அரசாங்கம் எங்களோடு நடத்தும் பேச்சுக்களில் இரட்டை நாக்குடன் பேசுவதை அவதானிக்க முடிகிறது.

இங்கு வந்து எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது ஒன்றைச் சொல்கிறார்கள். கொழும்பு சென்றடைந்ததும் இன்னொன்றைக் கூறுகிறார்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் நோர்வே நாட்டு தேசிய செய்தி ஏஜென்ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் பயிற்சி முகாம் ஒன்றில் வைத்து வழங்கப்பட்ட அந்தப் பேட்டியில் திரு. கரிகாலன் மேலும் தெரிவித்துள்ளது!—

தமிழ்ப் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய சமஷ்டித் திட்டம் ஒன்றை தமிழீழத்துக்கு மாற்றுத் தீர்வாகப் பரிசிலனை செய்வதற்கு நாம் விருப்பம் தெரிவித்துள்ளோம்.

ஆனால், அரசு அதற்கு முன்னர் தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை அகற்றி, அவர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை நீக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள இராணுவ முகாம்களில் ஒன்றை (பூநகரி) அகற்றி மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு வகை செய்ய வேண்டும்.

அதன் பின்னர் நாம் அரசியல் பேச்சுக்களை நடத்தலாம்.

நாங்களும் சமாதானத்தை விரும்புகிறோம். ஆனால் தமிழ் மக்களுக்கு அவர்களின் மண்ணில் தன்னாட்சி அரசு அமைக்காமல் சமாதானம் சாத்தியமாகாது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சமாதானத்தின் மீது உள்ள விருப்பத்தில் எமக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் சிங்களவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட இயக்கத்தின் மீதும், இராணுவத்தின் மீதும் எமக்கு நம்பிக்கை இல்லை.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டால், தன்னாட்சி உரிமையும், சுய அதிகாரமும் வழங்கப்பட்டால், விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிடுவார்கள் — என்று தெரிவித்துள்ளார். [அ]

# யாழ். மாணவர் வெட்டுப் புள்ளி: பிரச்சினைக்கு களம் அமைக்கக்கூடாது

### கொழும்பு தமிழ் நாளிதழ் ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, பெப். 11

யாழ். மாணவர்களில் வெட்டுப்புள்ளிப் பிரச்சினை இனியும் ஒரு பிரச்சினைக்கு களம் அமைக்கக் கூடாது.

இவ்வாறு தினகரன் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

'பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி' என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கம் நேற்றைய பதிப்பில் வெளியாகியது.

ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வெட்டுபுள்ளி பற்றி ஆராய ஆணைக்குழு அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் கம்பஹாவிலும் களுத்துறையிலும் கண்டியிலும் சாதாரண வாழ்க்கையே நிலவுகிறது.

ஆனால் யாழ்ப்பாணம் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இயல்பு வாழ்க்கையை இழந்து தவிக்கிறது.

படிப்பதற்கு மின்சாரம் இல்லை. எழுதுவதற்கு காகிதாதிகள்,கொப்பிகள் பேனாக்கள் இல்லை. மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் போதியளவு இல்லை.

தாயை, தந்தையை, சகோதரர்களை துப்பாக்கிகளுக்கு பலியிட்டுவிட்டு படிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தான் அப்பகுதி மாணவர்கள் வாழ்கிறார்கள்.

இவ்வாறு யுத்த சூழ்நிலையில் வாழ்ந்த மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி அதிகரிக்கப்படுவது அநீதியானது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினையை ஆயுதமயப்படுத்தியதே தமிழ் மாணவர்பேரவை என்ற மாணவர் அமைப்புத் தான்.

மாணவர்கள் எளிதில் ஸ்தாபனமயப்படுத்தப்படக் கூடியவர்கள். நீதியான நோக்குகளுக்காகவும் பிழையான நோக்குகளுக்காகவும் கூட ஆக்கிரோஷமாகப் போராடும் தன்மைகொண்டவர்கள்.

எனவே இந்த வெட்டுப் புள்ளி பிரச்சினைக்கு இனியும் ஒரு பிரச்சினைக்கு களம் அமைக்கக் கூடாது.

ஆணைக்குழு அமைத்து ஆராய்ந்து நீதி வழங்கப்படுட் என ஜனாதிபதி தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஈழ அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுகிறார்களா?

### இல்லை என்கிறது கமிஷன்

கொழும்பு, பெப். 11

தமிழகத்தில் உள்ள 70 ஆயிரம் தமிழ் அகதிகள் பலாத்காரமான முறையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் எனக் கூறப்படுவதற்கான சாட்சியங்கள் எதுவும் இல்லை. இப்படி இந்திய தேசிய மனித உரிமைகள் கமிஷன் தெரிவித்துள்ளது.

இந்தக் கமிஷனின் தலைவர் நீதியரசர் ரங்கநாதன் மிஸ்ரா அண்மையில் தமிழ்நாட்டில் உள்ள மூன்று ஈழ அகதிகள் முகாம்களில் உள்ளவர்களைச் சந்தித்துப் பேசினார்.

'தாம் கதைத்த அகதிகளில் அதிகமானோர் தங்களது சொந்த நாட்டுக்கு திரும்பவே விருப்பம் கொண்டுள்ளனர்'' என்று அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் தற்போது 138 முகாம்களில் ஈழஅகதிகள் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாம்களுக்கு அரசசார்பற்ற அமைப்புக்கள் செல்ல கடந்த 18 மாதங்களாக தடைவிதிக்கப் பட்டுள்ளது.

இந்த முகாம்களுக்கு அவர்கள் சென்று சேமநல உதவிகளை வழங்க அனுமதிக்க வேண்டும் என்றும் நீதியரசர் ரங்கநாதன் மிஸ்ரா கேட்டுள்ளார். [இ-3]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். திருநெல்வேலி ''ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு'' என்னும் நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக செல்வி புஸ்பா செல்வநாயகம் கலந்து கொள்வார். முதற் பிரதியை திரு. சண்முகம் சங்கரலிங்கம் பெற்றுக்கொள்வார்,

விழா நிறைவில் நூலசிரியர் திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார். (ஓ-14)

யாழ். ஆஸ்பத்திரியில்

# ஒட்சிசன் சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ் பொது வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் ஒட்சிசன் சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லை.

சத்திர சிகிச்சை நிலையத்திலும், மற்றும் ஆஸ்பத்திரியின் அதி தீவிர, அவசர சிகிச்சைப் பிரிவுகளிலும் இருக்கின்ற ஒன்றிரண்டு சிலிண்டர்களை, வைத்தியர்கள் மிக அவதானமாகவும், சிக்கனமாகவும் பாவித்து வருகின்றனர்.

மேலும், சத்திர சிகிச்சைப் பிரிவில் சத்திரசிகிச்சைக்கு மிக அத்தியாவசியமான சில ஊசி மருந்து வகைகளும், எலாஸ்ரோபிளாஸ்ரர் போன்ற பொருள்களும் முடிவடைந்துவிட்டன.

இப்பொருள்களை ஆஸ்பத்திரி நிர்வாகம் வெளி மருந்து விற்பனை நிலையங்களில் பணம் கொடுத்து வாங்கி நோயாளரின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்கின்றது.

அத்துடன் ஒட்சிசன் சிலிண்டர் வெளியில் கொள்வனவு செய்ய முடியாத ஒரு பொருளாக இருப்பதால், கொழும்பில் இருந்து வருவதையே நிர்வாகம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இது சம்பந்தமாக ஆஸ்பத்திரி நிர்வாகம் கொழும்பு தலைமையகத்துடன் பல தடவை தொடர்பு கொண்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. [இ-15]

## பதவி உயர்வு பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கி தரம் 2 உதவி பிரதேச முகாமையாளர்களை பதவி உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான [illegible] கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் [illegible] பட்டுள்ளது. (ஓ-4-7)

வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களின்

# பரிசுபெற்ற பத்து கதைகள் நூலுருப் பெறுகின்றன

திருகோணமலை, பெப். 11

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் முயற்சியில் வடக்கு - கிழக்கு எழுத்தாளர் பத்துப் பேரின் பரிசு பெற்ற சிறுகதைகள் நூலுருவாக்கப்பட்டுள்ளன.

விரைவில் மட்டக்களப்பில் நடைபெற இருக்கும் வடக்கு-கிழக்கு சாகித்திய விழாவில் இந்நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட இருப்பதாக கலாசார உதவிப் பணிப்பாளர் எதிர்மன்னசிங்கம் கூறினார். (க)

## பிரதி ஆளுநராக ஈஸ்வரதாஸன்

கொழும்பு, பெப். 11

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்களாக திரு எஸ். ஈஸ்வரதாஸன், திரு பி. அமரசிங்கா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## புலிகளின் குரல் வானொலியில்

11 — 02 — 1995
சனி இரவு
★ 8-01 — தாயகப் பாடல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கவியரங்கம்— ''கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால்...?''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

12 — 02 — 1995
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15—களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00— மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
சனி மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி வினாப்போட்டி
★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## பட்ஜெட்டுக்கு ஐ. தே. கட்சி முழு எதிர்ப்பு

கொழும்பு, பெப். 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வரவு செலவுத்திட்டத்துக்கு முற்றுமுழுதாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஐக்கியதேசியக்கட்சி நாடாளு மன்றக்குழு தீர்மானித்துள்ளதென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## உப தபாலகம் திறக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களின் கடிதங்களை திருகோணமலைக்கும், கொழும்புக்கும் விரைவாக அனுப்புவதற்கு வசதியாக யாழ். செயலகத்தில் ஒரு உப. தபால் கந்தோரை இயங்கச் செய்யுமாறு யாழ். அரச அதிபர் வட. மாகாண பிரதி தபால்மா அதிபரை கேட்டுள்ளார் என்றும் —

இது தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை எடுக்க வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிய வருகிறது. (க-5-17)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் 5 ஆம் நாளான இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், மாலை 7மணிக்கு ஆசிரியர் திரு. க. ஆனந்தராசாவின் 'கணபதி மகிமை' என்ற இசைச் சொற்பொழிவும் நடைபெறும். (ஓ 30-14)

★ ★ ★

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வீர ஏகாதசி சிறப்புற நடைபெறும்

## ராஜினாமா

கொழும்பு, பெப். 11

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் இந்திர கீர்த்தி சிறீவீர கடந்த திங்களன்று தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தனது ராஜினாமாக் கடிதத்தை கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டிக்கும் அனுப்பி வைத்துள்ளார் (ஓ-7-6

## தென்னங்கன்று

புலோலி கமநல சேவை நிலையம் மூன்று வருடங்களில் பயனபெறக் கூடிய நல்லின தென்னங்கன்றுகளை பொதுமக்களுக்கு தாராளமாக விநியோகித்து வருகிறது. (ஓ 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் போட்டி...!!

உலக உலா

வாசகர்களே...!!

ரூபா 15,000 த்திற்கும் மேற்பட்ட பெறுமதி மிக்க பரிசில்களுடன் இம்மாத உலக உலா உங்களை நாடி வருகின்றது.

முதற் பரிசு — ரூபா 3,000 பெறுமதியான பொருள்கள்

இரண்டாம் பரிசு — ரூபா 2,000 பெறுமதியான பொருள்கள்

மூன்றாம் பரிசு — ரூபா 1,000 பெறுமதியான பொருள்கள்

மேலும் தலா ரூபா 480/- பெறுமதியான இருபது ஆறுதற் பரிசுகளும் உண்டு

மேலதிக விவரங்களுக்கு பெப்ரவரி 1995 உலக உலாவை வாங்கிப் பாருங்கள்

வாங்கும்போது போட்டிக்கான கூப்பன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை கவனித்து வாங்குங்கள்

பிரதி ஒன்றின் விலை ரூபா 79.99 மட்டுமே

✶ முந்துங்கள்
பரிசுப் பொருள்களை
வெல்லுங்கள் ✶

[சி 11342]


# போராளிகளைத் திருப்பி அனுப்பும் நோக்கம் தமிழக அரசுக்கு இல்லை

## சென்னையில் தெரிவிப்பு

கள் சந்தேகநபர்கள் மற்றும் போராளிகள் எவரும் தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு வருவாய் நிறுவன ஆணையாளர் எம். ரகுபதி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு போராளிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பவிருப்பதாக கூறப்படுவது தவறு என்றும்—

இது தொடர்பாக மனித உரிமைக் கமிஷன் கடிதம் எதையும் தமக்கு அனுப்பவில்லை என்றும்—அவர் கூறினார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆறாயிரத்து 489 ஈழ அகதிகள் இருகப்பல்களில் இலங்கைக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை, பெப் 11

வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்ப பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. வீ. சிவஞானபோதன் தலைமையில் நடைபெறும். (இ-161)

## கப்பலில் செல்லும் நோயாளிகளுக்கு

மணிலா, பெப். 11

தமிழகத்தில் தடுப்பு முகாம்களில் உள்ள விடுதலைப் புலி

விசேட சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகளை 'சிடான்ஸர்' கப்பல் மூலம் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நோயாளிகள் அனைவரையும் பிரயாணத்துக்கு பதிவு செய்வதற்காக அடையாள அட்டை, மற்றும் ஆவணங்களுடன் நாளை ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு தமது பணிமனையில் சமுகமளிக்குமாறு யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

## அகதிகள் சென்ற படகுகள் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 11

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளின் படகுகள் தொடர்பாக தமிழக அரச அதிகாரிகள் அகதி முகாம்களுக்குச் சென்று விசாரணைகளை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழ அகதிகளுக்குச் சொந்தமான 182 படகுகள் தற்போது தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 82 படகுகள் திருமலை மாவட்ட மீனவர்களுக்குச் சொந்தமானவை.

தமிழகத்துக்கு அகதிகளுடன் சென்ற இப் படகுகள் நாகபட்டினம் கடற்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஏனைய 100 படகுகளும் தலைமன்னார் பகுதியில் இருந்து அகதிகளுடன் சென்றவை ஆகும். இவை மீனவர்களுக்கும்ச் சொந்தமானவை.

இப்படகுகளில் சென்ற அகதிகள் தற்போது தமிழக முகாம்களில் உள்ளனர்.

## முருங்கன் மக்கள் வங்கி மீண்டும் நானாட்டானில்

யாழ்ப்பாணம், பெப் 11

மக்கள் வங்கியின் முருங்கன் பகுதிக் கிளையை இம்மாப் முடிவுக்குள் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது 1984 ஆம் ஆண்டில் இருந்து மூடப்பட்டு மன்னாரில் இயங்கி வந்த இந்த வங்கிக் கிளை மீளவும் நானாட்டான் ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இந்த வங்கிக் கிளை இயங்க ஆரம்பித்ததும் மன்னார் பெருநிலப் பரப்பிற்கான கொடுக்கல் வாங்கல்கள் யாவும் இக் கிளையின் ஊடாக மேற்கொள்ளப்படும் என்றும் —

இவ்வங்கியில் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருந்த வாடிக்கையாளர்களின் போக்கு வரத்துச் சிரமங்கள் நீங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## அரசியல் நிலை தொடர்பாக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 11

இன்றைய அரசியல் நிலைப்பாடு குறித்த கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாகிகள், அரச திணைக்கள, கூட்டுத்தாபனங்களின் தொழிற்சங்க நிர்வாகிகள், வர்த்தக சங்கங்கள், தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் ஆகியோரை அந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### ஹமில்டனின்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்படுவார் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் உறுதி செய்யப்பட்டிருந்தது — குறிப்பிடத்தக்கது. [இ-ஐ-3 7]

### பொருள்கள்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோமாரி, மாஹோ கப்பல்கள் தற்போது வடபகுதிக்கான பொருள்களை கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றிக் கொண்டிருக்கின்றன.

இக்கப்பல்களின் கடைசி வடபகுதிப் பயணமாக இது இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது [இ-3-4]

### 4 ஆம கட்டப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

கண்காணிப்புக் குழுக்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து ஆறாக அதிகரிக்கப்பட உள்ளது.

ஆகவே மற்றைய இரு குழுக்களின் தலைவர்களும் வந்து கண்காணிப்புக் குழுக்களை அமைத்து செயற்பட ஆரம்பிக்க சிறிது காலம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜே.ஆர்.—..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம அளித்த விருந்துபசாரத்தின் போது உரையாற்றுகையில் ஜனாதிபதி இது பற்றியும் அறிவித்தார். (இ-ஐ-6)

### தீர்வு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறாவிட்டால் பாதுகாப்புக்கென அதிக தொகை ஒதுக்கப்பட வேண்டியதில்லை. இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டால் பாதுகாப்புச் செலவினத்தில ஆயிரத்து முந்நூறு கோடி ரூபா மீதமாகும்.

இப்படி அவர் மேலும் கூறினார். [அ-7]

### இனபபோரின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலாக ஜனாதிபதிப் பதவி வகித்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமது தாயாரின் சிவில் உரிமைகளை பறித்தமை குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா கடுமையாகச் சாடி கருத்துத் தெரிவித்தார்.


HATTON NATIONAL BANK LIMITED HNB

ஹட்டன் நஷனல் வங்கி ஆதரவில்

மாபெரும் கூடைப்பந்தாட்டப் போட்டி

இடம்: யாழ். பல்கலைக்கழக ஆடு திடல்

காலம்: 13-02-95 திங்கட்கிழமை முதல்

நேரம்: பி. ப. 3.30 மணி

கூடைப்பந்தாட்ட ரசிகர்களை அன்புடன் அழைக்கிறோம்

ஹட்டன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[சி/542]



மதுப்பிரியர்களே! NO. I BAR

யாழ். நகரில் உங்கள் உவகை தீர்க்க தயாராக இருக்கிறது

யாழ். எண் ஒன்று மதுபானச்சாலை

உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்களையும், குளிரூட்டப்பட்ட பியர், ஸ்ரவுட் வகைகளையும் ஒரேநேரத்தில் சுவைமிகுந்த கடலுணவு, மாமிச உபஉணவு வகைகளுடன்

✶ அருந்தி மகிழ்ந்திட ✶

யாழ். எண் ஒன்று மதுபானச்சாலை

YARL NO. ONE BAR

408, கேணல் கிட்டு சாலை,
(பழைய பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/376)


## தவறிவிட்டது

கொடிகாமம் கச்சாய் வீதியில் அமைந்துள்ள தேவாலயத்திற்கும் கொயிலாமனைக்கும் இடையில் தாலிக்கொடி ஒன்று நேற்றுப் பின்நேரம் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொடிகாமம் கிருஷ்ணா கல்வி நிலையத்தில் அல்லது திருவருள் களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[35160]

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சிவகுரு

இராமலிங்கம் சிவகுரு (இளைப்பாறிய லிகிதர் போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்) 8-2-95 காலை 7 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

இவர் நாகேஸ்வரியின் அன்பு கணவரும் செல்வக்குமார் (ஜேர்மனி), கோமதி, வசுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தந்தையும் அருணகிரிநாதன் (அரலி உபதபால் அதிபர்), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்
அருணகிரிநாதன்
(மருமகன்)

செல்வா வீதி,
தொல்புரம் மேற்கு.
சுழிபுரம்

(35159)

## திருமதி தில்லையம்பலம பூரணம்

பாலாவோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும், தற்போது சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் பூரணம் 9-2-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் சிவலிங்கராசா, இராசேந்திரம், தியாகராசா, இராசபூபதி, வைகுந்திமாலா, லலிதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநாவுக்கரசு, பாலசிங்கம், மகராசா, மகேஸ்வரி, இந்திராணி, மணிமேகலை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (11-2-95) காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக திருவடி நிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறறார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. சிவலிங்கராசா
(மகன்)

சத்தியக்காட்டு வீதி.
சுழிபுரம்.

[35139]

## சுப்பிரமணியம பரமேஸ்வரன (குட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் பரமேஸ்வரன் (குட்டி) 1-2-1995இல் பிரான்ஸில காலமானார்.

இவர் காலஞ்சென்ற இ.ஆ. சுப்பிரமணியம் பிரான்ஸில் வசிக்கும் திருமதி இராசமமா ஆகியோரின் அருமை மகனும் அளவெட்டி, அரசடியைச் சேர்ந்த இரத்தினலிங்கம், திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும், இரத்தினாம்பிகையின் (சாரதா) அன்புக் கணவரும் பமிலா, அஜித், விஜித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரன் (ஜேர்மனி), பாலகுமாரன் (ஜேர்மனி), ஞானகுமாரன் (இத்தாலி), கணேசகுமாரன் (இத்தாலி), திருமதி சிவரஜனி இந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிருஷ்ணகுமார் (வீரவேங்கை ராஜு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-2-1995 இல் பிரான்ஸில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
வ. கதிர்காமத்தம்பி
(மாமன்)

''அன்னை இல்லம்''
நீதிமன்ற ஒழுங்கை.
மல்லாகம்.

[35147]

## கந்தையா புவனேந்திரம

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னப்பிள்ளை ஆகியோரின் மகன் புவனேந்திரம் காலமாகிவிட்டார்.

அன்னார் குணேஸ்வரியின் அன்புக் கணவரும் யசிந்திரன், கீதா, சுசி ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி மகேஸ்வரி, கமலேஸ்வரி திலகவதி, நவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக இன்று 11-02 1995) சனிக்கிழமை காலை 10மணிக்கு உரும்பிராய் எருளன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பு. குணேஸ்வரி
[மனைவி]

உரும்பிராய் வடக்கு.
உரும்பிராய்.

(35148)

# மரண அறிவித்தல்கள்

## B. J PARAMADAS
(Rtd. Deputy Director, Irrigation)

வதிரியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளரான பரமதாஸ் 10-02-1995 அன்று கர்த்தருக்குள் மகிமைப் பிரவேசம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஜோசப், திருமதி அலிஸ் ஜோசப் அவர்களின் அன்புப் புதல்வனும், லில்லியின் அன்புக் கணவரும், சாமினி, மிலானி, நில்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதாசன், குமாரதாஸ், தேவமலர் அரியரத்தினம், சத்தியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தகுமார், நீல் ஆகியோரின் அன்பு மாமனாரும், லில்லி, மாலின், அரியரத்தினம், பிறின்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொஷேல், சந்தேன், ஆறோன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் புனித உடல் மக்களின் அஞ்சலிக்காக ஜெயரட்னாபால இல்லத்தில் வைக்கப்படும்.

தகவல்:
அலன் சத்தியதாஸ்

3/26 பொன்சேகா வீதி,
கல்கிசை.

[35144]

## சுபபையா சிவரெததினம

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவை வாழ்விடமாகவும், தற்போது இல 27, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குழியில் வசித்தவருமாகிய சுப்பையா சிவரெத்தினம் காலமாகிவிட்டார்.

இவர் சுப்பையா – வள்ளியம்மை அவர்களின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற அரியகுட்டி சிறிரங்கம் தம்பதிகளின் மருமகனும, நித்தியலெட்சுமியின் அன்புக் கணவரும், யாதவன் (ஜேர்மனி), யசோதா (ஜேர்மனி), ஜனதா (சுவிஸ்லாந்த), பாஸ்கரன் (சுவீஸ்லாந்து), ஜெயந்தன் (பரி. யோவான் கல்லூரி மாணவன்), நித்தியஜீவன் [பரி. யோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுவாஜினி (ஜேர்மனி), இந்திரக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், இராசகோபாலின் [ஆசிரியர் – கொழும்பு] அருமைச் சகோதரரும், விமலராஸ் (அமெரிக்கா), மோகனராஸ் (அமெரிக்கா) ஆகியோரின் பெரியதகப்பனாரும், அன்னம்மாவின் (புங்குடுதீவு) மைத்துனரும், முகுந்தன் (ஜேர்மனி), அபிசுதன் (ஜேர்மனி), மதுசயா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (12-02-1995) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. S. மணியம்.
(மருமகன்)

27, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

[35158]

## திருமதி பார்வதிப்பிள்ளை சிவகுமாரசூரியர்

தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்டவரும் அரசடி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பார்வதிப்பிள்ளை சிவகுமாரசூரியர்நேற்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுமாரசூரியரின் அருமை மனைவியும், திருமதி இரத்தினம், சி. க. குமாரசூரியர் [மக்கள் வங்கி] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்றசேனாதிராசா, கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவராசா [கனடா] காலஞ்சென்ற இரத்தினராசா DR ஆனந்தராசா [யாழ் போதனா வைத்தியசாலை], கணேஷ் குமாரசூரியர், சங்கர் குமாரசூரியர் ஆகியோரின் பேர்த்தியும் ஆனந்தகுமார், நீராஜா ஆகியோரின் பூட்டியும்ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை இன்று 11-02-95 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. க. குமாரசூரியர்
(மகன்)
மக்கள் வங்கி

126/5 அரசடிவீதி
யாழ்ப்பாணம்

35157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-02-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது